1974 மார்ச் 29]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போதே அந்தக் கோவிலில் ஒரு கலைக்கூடம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எதிர் காலத்தில் அதை மிகச் சிறந்த வகையில் வைப்பதற்கு இப்போது திருமலைநாயக்கர் மகால் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. அது புதுப்பிக்கப் பட்ட பிறகு தென் மண்டபத்திலுள்ள பல்வேறு கலைப்பொருள்களைத் திரட்டி வைத்து சிறந்த கலைக்கூடம் ஆக்கவேண்டும் என்ற எண்ணம் தமிழ்நாடு தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினருக்கு இருந்து வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த பிரகதீஸ்வரர் கோவிலில் உள்ள ஓவியங்கள் எல்லாம் எட்டு அல்லது பத்து நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த சோழர் காலத்தில் உள்ளவையாயிற்றே. அந்த ஓவியங்களின் மேல் நாயக்கர் காலத்தில் சில ஓவியங்கள் மேலே பூசப்பட்டு மாற்றப்பட்டி ருக்கின்றன என்று சொல்கிறார்களே, அப்படியானால் முன்னால் இருந்த அந்த ஓவியங்கள் தெளிவாகத் தெரிவதற்கு என்ன ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முதலில் சோழர் காலத்து ஓவியங்கள்தான் வரையப்பட்டிருந்தன. பின்னர் நாயக்கர் காலத்தில் பூசப்பட்டு வேறு ஓவியங்கள் வரையப்பட்டிருக்கின்றன என்று வல்லுனர்கள் கண்டறிந்த பிறகு உள்ளே சோழர் காலத்து ஓவியங்கள் தென்பட்டன. அதைப் பாதுகாக்க அந்த ஓவியங்கள் பழுதுபடாமல் இருக்கவும் வண்ணங்கள் குறையாமல் இருக்க வும் தக்க முயற்சிகளை எல்லாம் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதன் வண்ணப்படங்கள்தான் இந்தக் கலைக்கூடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். கே. கோவிந்தசாமி என்பவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத் துறைப் பேராசிரியராக இருந்தார்கள். அவர்கள்தான் முதன்முதலாக சோழர் காலத்து ஓவியங்களைக் கண்டறிந்தவர்.

மத்திய அரசின் கீழுள்ள கோயில்கள்

*667 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மத்திய அரசால் பராமரிக்கப்பட்டுவரும் ஆலயங் கள் எவை, எவை ?

(இ) இவற்றில் பல பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா ?

(உ) ஆம் எனில், அவை குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்னென்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 118 (ஒரு விவர அறிக்கை @ சபையில் வைக்கப்பட்டுள்ளது).

(இ) ஆம்.

(உ) இவை மைய அரசின் பராமரிப்பில் உள்ளதால் மைய அரசு தான் பழுது பார்க்கவேண்டும்.

திரு. கா. வேழவேந்தன் : இந்த விவர அறிக்கையில் 118 கோவில்கள் மத்திய அரசின் பராமரிப்பில் இருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டு தமிழ் மன்னர்களால் கட்டப்பட்ட இந்தக் கோவில்களைத் தமிழக அரசு பராமரிக்காமல் எங்கேயோ இருக்கிற மத்திய அரசு பராமரிக்கிறது. கங்கைகொண்டசோழபுரம் கோவிலில் உள்ள சிற்பங்கள், செஞ்சி, மாமல்லபுரம் போன்றவைப் பாழடைந்திருக்கின்றன. ஆகவே, நம் அரசு மத்திய அரசை வற்புறுத்தி அந்த 118 கோவில்களையும் தமிழக அரசே பராமரிப்பதற்குள்ள அனுமதியைப் பெறுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : குறிப்பாக, தஞ்சை பிரகதீஸ்வரர் கோவில், கங்கைகொண்டசோழபுரம் கோவில், வேலூர் கோட்டையில் உள்ள கோவில் ஆகியவற்றைத் தமிழ்நாடு தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின்கீழ் கொண்டுவரவேண்டுமென்று பலமுறை விண்ணப்பங்கள் செய்தும் மத்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. அகில இந்திய அளவில் அவை சிறப்பு வாய்ந்தவையாக இருப்பதால் அதை அகில இந்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர்தான் கண்காணித்துவருவார்கள் என்றும், அவற்றைப் புதுப்பிக்க நிதி திரட்டித் தந்தால் அதை ஏற்றுக்கொள்ள தாங்கள் தயாராயிருக்கிறோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அவற்றைத் தமிழ்நாடு தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின்கீழ் கொண்டுவரவேண்டுமென்று இரண்டு மூன்று முறை நம் முதல் அமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு எழுதியும் மத்திய அரசு அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : ஆலயங்கள் என்பது வணக்க ஸ்தலங்கள் என்று நினைக்கிறேன். அந்தக் கருத்துப்படி முஸ்லிம் மக்களுடைய ஆலயங்கள், பள்ளிவாசல்கள் பல முன்பு ஆட்சிபுரிந்து வந்த மன்னர்களால் ஆர்க்காடு, செஞ்சி, வேலூர் போன்ற இடங்களில் கட்டப்பட்டுள்ள ஒரு சில ஆலயங்கள் மத்திய அரசின் பராமரிப்பில் இருப்பதாக அறிகிறேன். அதுகுறித்து இந்த விவரப் பட்டியலில் ஒன்றும் தரவில்லை. ஆகவே, அப்படி பழுதடைந்துள்ள ஆலயங்களை எடுத்துக்கொண்டு அவற்றைச் சீர்படுத்த அரசு எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால் அப்படி மசூதிகள் ஏதாவது மத்தியஅரசின் பராமரிப்பின்கீழ் இருக்கின்றனவா என்பதைப் பற்றி அறிந்து சொல்லலாம்.

@ 158–164-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. வை. பாலசுந்தரம் : கங்கைகொண்டசோழபுரத்தில் உள்ள சிற்பங்கள் பிரகதீஸ்வரர் கோவிலில் இருக்கிற சிற்பங்களை விட மிக நுணுக்கமான சிற்பங்கள், அழகான சிற்பங்கள் என்று கூறுகிறார்கள். அப்படிப்பட்ட சிற்பங்களைப் பார்க்கச் செல்கிற சிலர் அவற்றின் கண்களைக் குத்தியும், மூக்கைக் குத்தியும் கேவலப்படுத்தும் நிலையில் இருப்பதால் அதை மத்திய அரசு எடுத்துக்கொள்கிற வரையில் நாம் தமிழக அரசே எடுத்துப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கங்கைகொண்ட சோழபுரம் கோவில் இன்று மத்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின்கீழ்தான் இருந்துவருகிறது. அதைப் பழுதுபார்த்து கலையாத அளவிற்கு பார்த்துக்கொள்ளவேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்தியிருக்கிறோம். தமிழக அரசிடம் அதைக் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தியுங்கூட கொடுக்காது மத்திய அரசின் கீழ் அது இருந்து வருகிறது.

திரு. கு. காமாட்சி : மாநில அரசின் நிர்வாகத்தின்கீழ் இருக்கிற கோவில்கள் மிகவும் அழகாக இருக்கின்றன. அடிக்கடி பழுதுபார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், மத்திய அரசின் நிர்வாகத்தின்கீழ் உள்ள கோவில்கள் எல்லாம் பழுதடைந்து கிடக்கின்றன. அவர்கள் அந்தக் கோவில்களை எல்லாம் எப்படிப் பராமரிக்கிறார்கள் ? மாநில அரசின் மூலமாகவா அல்லது அதற்காகத் தனி இலாகா அமைத்து, தனி அதிகாரிகளை நியமித்து அவர்கள் மூலம் செய்துகொண்டுவருகிறார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மத்திய அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறைக்கு இன்று கிளை அகங்கள் எல்லாம் இங்கு இருக்கின்றன. தென் மண்டலத்தைப் பொறுத்தவரையில் ஒரு பணி மனை இருந்து வருகிறது. அந்த அலுவலகத்தில் உள்ள அலுவலர்கள் இந்தப் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒதுக்கக்கூடிய பணம் போதவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய அரசு அதிகப் பணம் ஒதுக்கவேண்டுமென்று நாமும் வலியுறுத்தி வருகிறோம். இந்த ஆண்டு சில திட்டங்களை மேற்கொண்டிருக்கிறார்கள்.

பின்தங்கிய வகுப்பினருக்குக் குடியிருப்புகள்

*668 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பின் தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் வசிக்கும் சலவைத் தொழிலாளர்கள், முடி திருத்துவோர் ஆகியோர்களுக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?